இலங்கை திறந்த பல்கலைக்கழககம்
மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்
சட்டக் கற்கைகள் திணைக்களம்
சட்டமாணிப்பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டம் - மட்டம் IV
தொடர் மதிப்பட்டு பரீட்சை 1 - 2023/ 2024
ஒப்பந்தச் சட்டம் - LLU 4805
காலம் : 1 மணித்தியாலம்

திகதி 2024.11.08 நேரம் மு.ப.9.30- மு.ப.10.30

மொத்த வினாக்களின் எண்ணிக்கை - 02

ஒரு வினாவிற்கு(01) மாத்திரம் விடையளிக்குக.

தெளிவற்ற கையொழுத்துக்களுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

01. (I) ஆங்கிலச் சட்டத்தில் விருத்தியடைந்துள்ள முரண்தடக்கல் கோட்பாடு ஆனது, பிரதிபயன் இன்றியும் வாக்குறுதிகள் செயற்படுத்தப்படுவதை எவ்வாறு ஏற்புடையதாக்குகிறது என விளக்குக. உமது விடையை எடுத்துக்காட்டுவதற்கு தீர்ப்புச் சட்டங்களைப் பயன்படுத்துக.

(08 புள்ளிகள் )

(II) ரொஹான் என்பவன் 2023 இன் ஒக்டோபர் 17 ஆம் திகதி இடப்பட்ட கடிதம் ஒன்றின் மூலம் டொன்னிற்கு (ton) ரூ.60.000 என் நெற்பயிரை மீராவிற்கு விற்பனை செய்வதற்கு கொடை முனைவு செய்தான். 2023 ஒக்டோபர் 19 ஆம் திகதி அன்று மீரா அக் கடிதத்தைப் பெற்றாள். அவள் அக்கொடைமுனைவை ஏற்றதுடன் அதே தினம் மு.ப. 10.30 மணியளவில் ஏற்புக் கடிதத்தையும் ரொஹானிற்கு அனுப்பினாள். எவ்வாறாயினும் அக் கடிதம் தபால் தொடர்பாடலில் காணாமற் போனதுடன் அது ரொஹானை சென்றடையவில்லை. 2023 ஒக்டோபர் 20 ஆம் திகதியிடப்பட்ட கடிதம் ஒன்றின் மூலம் ரொஹான் தன் கொடைமுனைவை கைமீட்டான் . 2023 இன் ஒக்டோபர் 22 ஆம் திகதி மீரா கைமீட்டல் கடிததைப் பெற்றாள். 2023 இன் ஒக்டோபர் 21 ஆம் திகதி ரொஹான் 300 டொன்கள் (ton) நிறைந்த தனது நெற்பயிரை அருணிற்கு விற்றான்.

மேலுள்ள சந்தா்ப்பங்களின் சட்ட விளைவுகளை ஆராய்க. உமது விடையை பொருத்தமான தீர்ப்புச் சட்டங்களால் ஆதாரப்படுத்துக.

(12 புள்ளிகள் )

02.

I. கொடைமுனைவிற்கான அழைப்பிதழ் என்பதனை வரைவிலக்கணப்படுத்துவதுடன் கொடைமுனைவிற்கான அழைப்பிதழ் என்பதன் வேறுபட்ட வகைகளை ஆராய்க.

(08 புள்ளிகள் )

II. நிர்மல் என்பவன், தான் பாவனை செய்த ( Second hand) கார் வண்டியை ரூ 1200,000/= இற்கு விற்பனை செய்வதற்கு ரவி என்பவனுடன் ஒப்பந்தம் ஒன்றினை மேற்கொண்டான். பின்னர், 2023 இல் நிமலின் தந்தை சுகவீனமுற்று இருந்த போது ரவி உதவியளித்திருந்தான் என்பதனை கண்டறிந்த நிர்மல், விற்பனை விலையை ரூ 600,000/= ஆகக் குறைத்தான். 600,000/= இனை செலுத்திய பின்னர் கார் வண்டியின் உடைமையை ரவி பெற்றான். தற்போது நிர்மல் உண்மையான ஒப்பந்தமே மேலோங்கும் என்றும், அதன் பின்னரான விலைகுறைப்பு பிரதி பயன் ஒன்றால் ஆதாரப்படுத்தப்படாததால் அது பிணிக்கக்கபடாததெனவ வாதிட்டு ரவியிடம் இருந்து எஞ்சிய ரூ 600,000/= இனை நாடுகிறான் .

(அ) ஆங்கிலச் சட்டத்தின் கீழ் நிர்மலின் கோரிக்கையின் வலிதாந்தன்மையை பொருத்தமான தீர்ப்புச் சட்டங்களால் ஆதாரப்படுத்தி ஆராய்க.

(08 புள்ளிகள் )

(ஆ) உரோமன் டச்சுச் சட்டத்தின் கீழ் இச் சட்ட நிலை வேறுபடுமா? உமது விடைக்கான காரணங்களை விளக்குக.

(04 புள்ளிகள் )

***புதிப்புரிமை பெற்றது,***